(இ) கும்பகோணத்தில் உண்ணாவிரதம் இருந்தவர்கள் மீது தடியடிப் பிரயோகம்

திரு. ப. நெடுமாறன் : தலைவர் அவர்களே, கும்பகோணத்தில் நேற்றையதினம் போலீஸ் நிலையத்தில் ஒருவர் இறந்து போனது பற்றி சர்வ கட்சியினர் உண்ணாவிரதம் இருந்தார்கள். அவர்கள் மீதுதிடீரென்று போலீஸார் தடியடிப் பிரயோகம் நடத்தி அத்தனை சர்வ கட்சித் தோழர்களையும் நேற்று அழைத்துக் கொண்டு போய் போலீஸ் ஸ்டேஷனிலே வைத்திருக்கிறார்கள். இதுபோன்ற அராஜகமான நிலை கும்பகோணத்தில் ஏற்பட்டிருக்கின்றது........ (குறுக்கீடு)......இது முக்கியமான ஒரு விஷயம் என்பதால் உடனடியாக இதை எடுத்துக்கொள்ள வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : அதற்கான நோட்டீஸை எழுதிக் கொடுங்கள்.

திரு. ப. பொன்னுரங்கம் : துணைத் தலைவர் அவர்களே, திரு. சு. பாலன் அவர்கள் அனல் மின் நிலையம் மூடப்படும் என்று சொல்லப்பட்டது குறித்து கேட்டார்கள். அது பாயின்ட் ஆஃப் ஆர்டர் இல்லை என்று சொல்லிவிட்டீர்கள். சபை நடந்து கொண்டிருக்கின்றபோது ஏதாவது ஒரு பிரச்சினை கிளம்பினால் தான் பாயின்ட் ஆஃப் ஆர்டர் என்று கிளப்பலாம் என்று கிறீர்கள்........

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: இது பாயின்ட் ஆப் ஆர்டர் அல்ல. எனவே மீண்டும் மீண்டும் சொல்லிக் கொண்டிருக்கவேண்டாம் அமருங்கள்.

ஈ. கும்பகோணத்தில் காலரா

திரு. இரெ. இராசமாணிக்கம் : பேரவைத் துணைத்தலைவர் அவர்களே, கும்பகோணத்திலே 20 பேர் காலரா நோயினால் இறந்து இருக்கிறார்கள்.....

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : இதுபற்றி இன்றைக்குக் காலை திரு. மு. அப்பாதுரை அவர்கள் கேட்டு அதற்கு அமைச்சர் அவர்கள் பதிலும் சொல்லி இருக்கிறார்கள்.

திரு. என். எஸ். வி. சித்தன் : தலைவர் அவர்களே, கும்பகோணத்தில் உள்ள மருத்துவமனையில் ஏற்பட்ட சாவுபற்றி ஏற்கெனவே நாங்கள் ஒத்தி வைப்புத் தீர்மானம் கொடுத்திருக்கிறோம். எனவே தாங்கள் அருள்கூர்ந்து இதனை நாளை எடுத்துக்கொண்டால் மன்றத்திற்கும் விளக்கம் கிடைக்கும், மக்களுக்கும் விளக்கம் கிடைக்கும்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: அது ஆய்விலே இருக்கிறது. இன்றைக்கு காலையில்தான் அதுபற்றி என்னிடத்திலே சொல்லி இருக்கிறீர்கள். எனவே பின்னர் மாண்புமிகு அமைச்சர் அவர்களிடம் கேட்டு அதை எடுத்துக் கொள்வது பறிற் முடிவெடுக்கலாம்.

திரு. இரெ. இராசமாணிக்கம் : தலைவர் அவர்களே, நானும், கும்பகோணம் எம்.எல்.ஏ. அவர்களும் 55-வது விதியின் கீழ் நேற்றைய தினமே தீர்மானங்கள் கொடுத்திருக்கிறோம். மிகவும் அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்ச்சி இது..

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : அது ஆய்விலே இருக்கின்றது. எனவே அதுபற்றி பிறகு பார்க்கலாம்.

திரு. இரெ. இராசமாணிக்கம் : இதைவிட முக்கியமானது வேறு என்ன இருக்கின்றது.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : இது முக்கியமானது தான் என்பதை ஒத்துக்கொள்கிறேன். இதுபோன்ற பிரச்சினைகளை விவாதிப்பதற்காகத்தான் சட்டமன்ற உறுப்பினர்கள் இருக்கிறோம். எனவே அமைச்சர் அவர்களிடம் கேட்டு, பிறகு இது எடுத்துக்கொள்ளப்படும். (குறுக்கீடுகள்)

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, கும்பகோணத்திலே ஏற்பட்ட காலரா நோய் பற்றி மாண்புமிகு உறுப்பினர்கள் ஒத்திவைப்புத் தீர்மானம் கொடுத்திருக்கிறார்கள். அதுபற்றி அங்கே எடுத்துக்கொண்டிருக்கின்ற நடவடிக்கைகளைப் பற்றி உடனடியாக இங்கே சொல்ல முடியும் என்றாலும் எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் பற்றிய முழு நிலைமைகளையும் மற்றவைகளையும் விவரமாக நாளைக்கு எடுத்துச் சொல்வதாகச் சொல்லி இருப்பதால் நாளை எடுத்துக்கொள்ளலாம். மேலும் அமைச்சர் அவ்வாறு சொல்லியவுடன் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் திருப்தி அடைந்து விட்டார்கள் என்பதால் நாளைக்கு இது எடுத்துக்கொள்ளப்படலாம் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

3. கவன ஈர்ப்பு.

அம்பத்தூர் நகரியத்தில் உள்ள இடுகாடுகளில் அதிகக் கட்டணம் வசூலிப்பது

திரு. ஜே. சி. டி. பிரபாகரன் : பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ''அம்பத்தூர் நகரிய பராமரிப்பில் உள்ள சுடு காட்டில் பிணங்களை எரிக்க, அங்கீகாரம் பெறாதவர்கள், பொது மக்களிடமிருந்து அதிகக் கட்டணம் பெறுவது குறித்த'' அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.